ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2153/6 - 2019 දෙසැම්බර් මස 09 වැනි සඳුදා - 2019.12.09
*2153/6 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*
(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இரண்டாவது திருத்தம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.07.28 ஆம் திகதிய 1925/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் 2019.09.19 ஆந் திகதிய 2141/73 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,*
*இல. 1200/09, இராஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2019, திசெம்பர், 05.*

1A - PG 4819 — 20 (2019/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| பந்தி இலக்கம் | உத்தேச திருத்தங்கள் |
|---|---|
| 7.2.2.1 (iv) | (iv) ஏற்புடைய பாடத்துறையில் ஆரம்பப் பட்டத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் (தொழிற்துறைப் பாடங்களுக்காக எந்தவொரு துறையிலும் பெற்றுக்கொண்ட ஆரம்ப பட்டத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்) |
| 7.2.4 | (iii) எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் மற்றும் அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களிலிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.<br><br>(iv) பொதுவான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.<br><br>(v) எழுத்து மூலப் பரீட்சையில் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் கீழான செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையிலும் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையிலும் செயன்முறைப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறைக்கு அமைய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவு விண்ணப்பதாரிகள் சேவைக்கு ஆட்சேர்க்கப்படுவர். |
| 7.2.4.3 இல் (அ) | (அ) புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. |
| | “கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை” என குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் “தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை” என திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். |
| 7.2.4.4 | தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை :<br><br>(I) தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :<br><br>(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுக்கொண்ட மேலதிக தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும். |

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் | ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | ஏற்புடையதன்று |
| 2. ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 | |
| 3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறமை | 15 | |
| மொத்தம் | 50 | |

**குறிப்பு :**

(i) மேற்படி அட்டவணையின் 1 ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகளை உள்ளடக்கி தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கான விரிவான புள்ளிகள் வழங்கும் திட்டமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும்.

<table>
<tr><th>பந்தி இலக்கம்</th><th>உத்தேச திருத்தங்கள்</th></tr>
<tr><td></td><td>(ii) செயன்முறைப் பரீட்சை<br><br>(அ) பாடத்துக்கு உரியதாக தரப்படும் தலைப்பொன்றின் கீழ் செய்யப்படும் முன்வைப்புக்காக நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சையொன்றாகும்.<br><br><table>
<tr><th>புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்</th><th>ஆகக் கூடிய புள்ளிகள்</th><th>ஆகக் குறைந்த புள்ளிகள்</th></tr>
<tr><td>1. பிரவேசம்</td><td>05</td><td rowspan="5">20</td></tr>
<tr><td>2. பாட உள்ளடக்கம்</td><td>20</td></tr>
<tr><td>3. சமர்ப்பிப்பு முறை</td><td>10</td></tr>
<tr><td>4. நேர முகாமைத்துவம்</td><td>10</td></tr>
<tr><td>5. சுருக்கம்</td><td>05</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>50</td><td></td></tr>
</table></td></tr>
<tr><td>7.3.2.1 (v)</td><td>(v) ஏற்புடைய பாடத்துறையில் ஆரம்பப் பட்டத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்புப் பட்டம்<br><br>(தொழிற்துறைப் பாடங்களுக்காக எந்தவொரு துறையிலும் பெற்றுக்கொண்ட ஆரம்பப் பட்டத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்)</td></tr>
<tr><td>7.3.2.1 இன் கீழுள்ள விசேட குறிப்பு 01</td><td>சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை VII இல் குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஆகக் குறைந்த தகைமைகளின் கீழ் ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்ட தினத்திலிருந்து 05 வருட காலத்திற்குள் தான் ஆட்சேர்க்கப்பட்ட விடயத்திற்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையான கல்வித் தகைமைகளை பூர்த்திசெய்துகொள்வதற்கு தவறும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சம்பள ஏற்றங்கள், அவர்கள் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் வரையில் நிறுத்தி வைத்தல் வேண்டும்.<br><br>அந்த உத்தியோகத்தர்களின் தரம் II இற்கான பதவி உயர்வு, தகைமைகளைப் பூர்த்திசெய்வதற்காக எடுக்கும் மேலதிகக் காலத்திற்கு சமமான காலப் பிரிவினால் தாமதப்படுத்தப்படும்.</td></tr>
<tr><td>7.3.4</td><td>(iii) எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் மற்றும் அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கிற்கு சமமான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.<br><br>(iv) சாதாரண நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளில் அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.<br><br>(v) எழுத்து மூலப் பரீட்சையில் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் கீழான செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையிலும் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சையிலும் செயன்முறைப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறைக்கு அமைய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவு விண்ணப்பதாரிகள் சேவைக்கு ஆட்சேர்க்கப்படுவர்.</td></tr>
</table>

| பந்தி இலக்கம் | உத்தேச திருத்தங்கள் |
|---|---|
| 7.3.4.3 இல் (அ) | (அ) புள்ளிகள் வழங்கப்படமாட்டாது எனத் திருத்தப்படுகின்றது. |
| 7.3.4.4 | தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை என தலைப்பைத் திருத்துக. |
| 10.1<br><br>10.1.1 | தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு<br><br>பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள் :<br><br>(viii) திறன் விருத்திப் பாடநெறி 01 ஐ வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல். (அட்டவணைXI) என திருத்தியமைக்கப்படுகின்றது. |
| 10.2.1 (i) இல் (இ) | (இ) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு ஆட்சேர்க்கும் போது ஏற்புடைய பாடத் துறையில் பட்டப்பின் படிப்புப் பட்டம் அடிப்படைத் தகைமையொன்றாகக் கருதப்பட்ட உத்தியோகத்தர்கள் கல்வி தொடர்பான பட்டப் பின் படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 15.1 | **இதன் கீழுள்ள அனைத்து விடயங்களும் நீக்கப்பட்டு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.**<br><br>இடைக்காலத்தில் தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்த்துதல்.<br><br>(அ) 8 இல் விசேட குறிப்பு 02 ஏற்புடையதாகும்.<br><br>(ஆ) 1999.03.11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க சேவைப் பிரமாணக் குறிப்பின் 14 ஆம் பிரிவில் (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் 10.1.1 (II) மற்றும் (III) பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுவதோடு, (VIII) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தவிர்ந்த ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்யும் திகதியிலிருந்து பதவி உயர்வு வழங்கப்படும்.<br><br>* பதவி உயர்வுக்காக தகைமைப் பெற்றுக்கொள்ளும் திகதிக்கு சேவை வகுதி தரம் III இல் ஆகக் குறைந்தது ஏழு (07) வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் ஏழு (07) உழைத்திருத்தல்.<br><br>* அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு அமைய பதவி உயர்வு திகதிக்கு முன்னரான ஏழு (07) வருட காலப் பிரிவுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை காண்பித்திருத்தல்.<br><br>(இ) 1999.03.11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க சேவைப் பிரமாணக் குறிப்பின் 17 ஆம் பிரிவுக்கு அமைய ஆங்கில மொழி சித்தியடைய வேண்டிய தேவைப்பாட்டை பூரணப்படுத்தாத 2002.01.01 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் 02 வாரங்களுக்கு குறையாத ஆங்கில மொழிப் பாடநெறியொன்றை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். அந்த உத்தியோகத்தர்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள் இந்தத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களாக கருதப்படுவர். |

| *பந்தி இலக்கம்* | *உத்தேச திருத்தங்கள்* |
|---|---|
| 15.2 | *இதன் கீழ் 2019.09.19 ஆந் திகதிய 2141/73 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட திருத்தத்தின் கீழுள்ள விடயங்களை நீக்கி 2015.07.28 ஆந் திகதிய 1925/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்புடையதாகும்.* |
| *அட்டவணை* III<br>1.4 English Language | Communication Skills *எனத் திருத்தப்படுகின்றது.* |

*12-802*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*